## ஜனநாயக அரசின் சிறந்த பண்பு!

டிசம்பர் 1, 2 ஆகிய நாட்களில் தமிழ்நாடு அரசின் சார்பில், ‘ஆதி கலைக்கோல் விழா’ என்கிற நிகழ்ச்சி நடைபெற்றது. ஆதிதிராவிட பழங்குடியின கலைஞர்களையும், இலக்கியவாதிகளையும் ஒன்றிணைத்துப் பெரிய மேடையில் அவர்களை ஏற்றி, அழகு பார்த்த விழா என, அது குறித்துப் பதிவு செய்துள்ளார் எழுத்தாளர் அழகிய பெரியவன். அவரது பதிவிலிருந்து...

“ஒவ்வொரு முறையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறபோது மட்டும்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பது தற்செயலானது அல்ல. இந்த அரசு கொண்டிருக்கின்ற சமூக நீதி என்ற கொள்கை வழியிலான பார்வையின் விளைவு இது. பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளையும், பெரியாரின் பிறந்த நாளையும் சமத்துவ- சாதி ஒழிப்பு நாட்களாக அறிவித்ததுடன் மட்டும் நிற்காமல், அந்த நாட்களில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் இடையிலே பல வகையிலான கருத்தியல் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்து செயல்படுத்தியது இந்த அரசு.

ஆதிதிராவிடப் பழங்குடியின மக்களுக்கான ஆணையத்தை அமைத்தது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் கலைத் திருவிழாக்களை நடத்துகிறது இந்த அரசு. ‘சென்னை சங்கமம்’, ‘மாபெரும் தமிழ்க்கனவு’, ‘இலக்கியத் திருவிழா’, ‘புத்தகத் திருவிழா’ என, அரசு திட்டமிட்டு நடத்தி வருகிற இலக்கியப் பண்பாட்டு கலைநிகழ்ச்சிகளின் நீட்சியாகவும் வேறொரு பரிமாணமாகவும் இந்த ‘ஆதி கலைக்கோல் விழா’ வை நான் பார்க்கிறேன்.

இந்த மேடையில் பேசிய இலக்கியவாதிகளும் கலைஞர்களும் அரசு விழா என்பதற்காக தங்கள் குரலை அடக்கிக் கொள்ளவில்லை. மிகவும் இயல்பாகவும் வெளிப்படையாகவும் தங்கள் கருத்தை முன்வைத்தனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் சனநாயக அரசை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பில் செயல்பட உந்துவதும், அவற்றின் பலன்களை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதும் மிகவும் தேவையானதொரு ஜனநாயகச் செயல்பாடாக இருக்கிறது. இதுவே ஜனநாயகத்தின் ஆகச் சிறந்த பண்பு. சாதி ஒழிப்பில் அனைவரையும் ஒன்றிணைக்கின்ற இயங்கியல் புள்ளியும் இதுதான். குறுங்குழுவாத அபத்தவாதங்களுக்கும், சாதிய வாதங்களுக்கும் இங்கு உறுதியாக இடமில்லை" எனப் பதிவிட்டுள்ளார் எழுத்தாளர் அழகிய பெரியவன்.

## :.ப்ளாஷ்பேக்





ஆண்டாள் பிரியதர்ஷினி

### கொள்கை வழிப் பயணம்!

எனது தந்தையார் கவிஞர் நெல்லை ஆ.கணபதி, தமிழ் ஆசிரியராக, தலைமை ஆசிரியராக, மேடை நாடக நடிகராக பகுத்தறிவு - திராவிடச் சிந்தனைகளைக் கொண்டு சேர்த்தவர். தந்தை பெரியார், நெல்லை வருகையின்போது அப்பாதான் உடன் இருப்பார் என அப்பாவின் நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். 1960-களிலேயே பாளையங்கோட்டையில் ஊர் அதிசயிக்கும் வகையில், காதல் திருமணம் செய்தவர். தந்தை பெரியார், அவர் வளர்த்த அன்பு நாயுடன் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம் மிகப் பழமையானது என்றாலும், அதுவே எங்களின் பெருஞ்செல்வமாக இருக்கிறது. அப்பாவின் வழியில் என்றும் கொள்கைப் பயணம் தொடர்கிறது.

**- கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி,**
**மக்கள் செய்தித் தொடர்பு மாநிலத் துணைத் தலைவர்,**
**தலைமைக் கழகம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உ.பி.-யில் ஒரு தி.மு.க.!

1973-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போலவே டி.எம்.கே. என்ற பெயரில் ஒரு கட்சி உதயமானது. ரூப்நாத் யாதவ் என்ற அம்மாநில முன்னாள் அமைச்சரை அமைப்பாளராகக் கொண்ட கட்சி இது. “கலைஞரின் நல்லாசியைப் பெற்ற எங்கள் கட்சி, தமிழ்நாட்டில் உள்ள தி.மு.க.-வைப் போலவே செயல்படும். பிற்படுத்தப்பட்ட- தாழ்த்தப்பட்ட மக்களின் அடிமைவிலங்கை உடைத்தெறிய எங்கள் அமைப்பு பாடுபடும்” என்றார்.


# சீரணி ⟹ இளைஞர் அணி

39

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

ஓவியம் : ரவி பேலட்



## சமத்துவக் கொள்கையில் பூத்த திட்டம்!

2000-ஆம் ஆண்டு மார்ச் 28-ஆம் தேதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்தை உருவாக்கினார், கலைஞர். அப்படி ஒரு துறை, இந்திய அளவில் முதன்முதலில் தமிழ்நாட்டில்தான் உருவாக்கப்பட்டது. விளையாட்டுத் துறை என்பதுடன், ‘இளைஞர் நலன்’ என்ற விஷயத்தையும் சேர்த்தார் கலைஞர். அந்தத் துறை, இளைஞர்களின் உடல்திறனை மட்டும் வளர்க்காமல், மன உறுதியையும் சேர்த்தே வளர்க்க வேண்டும் என்பதற்காக, அதை உருவாக்கினார்.

அதற்கு அடிப்படையாக இருந்தது, தமிழ்நாட்டில் ‘இளைஞர் அணி’ எப்படி அமைய வேண்டும் என்கிற கனவு. அந்தக் கனவு பேரறிஞர் அண்ணாவிடமிருந்து கலைஞருக்கு கைமாறிய கனவு.

**நேரடியாக ‘இளைஞர் அணி’ என்ற அரசுத் திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. அரசுத் திட்டமாக இல்லையென்றால் என்ன, அதைக் கழகத்தின் அணியாக உருவாக்கி, அண்ணாவின் கனவுக்கு உரு கொடுத்தார்.**

### சீரணி யோசனைகள்

சீரணியின் தொடக்கக் காலத்தில், சமூகப் பணிகள் தவிர, இளைஞர்களின் கல்வி, வேலைவாய்ப்புகளிலும் கவனம் செலுத்தினார் கலைஞர். அதற்காக இளைஞர் மன்றங்களை உருவாக்கத் திட்டமிட்டார். குறிப்பாக, மூன்று முக்கியமான விஷயங்களைச் சீரணி மூலம் செயல்படுத்தப் பரிந்துரைகளைப் பெற்றார்.

ஒன்று, மேல்நாடுகளைப் போன்று ‘சீர்திருத்தங்களுக்கு முன்னோடி’ எனப் பெயர் பெற்ற தமிழ்நாடு அரசு, ‘இளைஞர் கல்வி விஞ்ஞானம்’ என்ற புதிய துறை ஒன்றை அமைப்பதுடன்,‘இளைஞர் பணியில்’ தேர்ச்சி பெற்ற நிபுணர்கள், கல்வி அதிகாரிகள், இளைஞர் மன்றப் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபையை நிறுவ வேண்டும்.

இரண்டு, எல்லா உயர் தரப் பள்ளிகளும் கல்லூரிகளும், தேர்வு பெற்று வேலை தேடும் இளைஞர்களுக்கு, இளைஞர் சேவையைப் பற்றிப் பயிற்சி அளிக்கவும், வேலை வாய்ப்பு அளிக்கும் வழிகளைத் தெரியப்படுத்தவும், இளைஞர் மன்றங்களை நிறுவ சட்ட அடிப்படையில் அரசு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும்.

மூன்று, தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் இளைஞர்களுக்கு ஒரு மன்றம் என்ற அடிப்படையில், இளைஞர் மன்றங்கள் அமைத்து, அவர்களுக்கு நற்பயிற்சி அளிக்க அதிகாரிகளையும், நிறுவனங்களுக்கு வேண்டிய வசதிகளையும் அரசு அளிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் மூலம் சமுதாயச் சீர்திருத்தமும், சமூக முன்னேற்றமும் நிலைநாட்டப்படும். இந்த யோசனைகளைக் கருத்தில் கொண்டு, ஒருங்கிணைந்த பல திட்டங்களைத் தீட்டினார் கலைஞர். ஆனால் நேரடியாக ‘இளைஞர் அணி’ என்ற அரசுத் திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. அரசுத் திட்டமாக இல்லையென்றால் என்ன, அதைக் கழகத்தின் அணியாக உருவாக்கி, அண்ணாவின் கனவுக்கு உரு கொடுத்தார். அதன் மற்றொரு வடிவமாகத்தான் 2000-வது ஆண்டில் இளைஞர் நலனுக்காக தனித் துறையை உருவாக்கினார்.

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

39

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”





## புறக்கணிக்கப்பட்டவர்களின் பொய்யும் மக்களைக் காக்கும் அரசும்!

***மழை-வெள்ள பாதிப்புகளையெல்லாம் தி.மு.க. அரசின் கணக்கில் எழுதுகிறார்களே அ.தி.மு.க., பா.ம.க, பா.ஜ.க. தலைவர்கள்?***

திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு முழுமையான பலனைத் தருவதுடன், இந்திய அளவிலும் பல மாநிலங்களில் இந்தத் திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீது எந்தக் குறையும் சொல்ல முடியாத நிலையில், சொன்னாலும் மக்களிடம் எடுபடாத நிலையில், மழை-வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தி.மு.க. அரசு மீது பழிபோடலாம் என நினைக்கின்றன எதிர்க்கட்சிகள்.

‘ஃபெஞ்சல்’ புயலின்போது சாத்தனூர் அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியதால், கரையோரப் பகுதி மக்களுக்கு 5 கட்டங்களாக முறையான அறிவிப்பை வெளியிட்டு, தண்ணீரைத் திறந்திருக்கிறது நிர்வாகம். எந்தெந்த தேதியில் எந்தெந்த நேரத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பது, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் தெரிந்துள்ள நிலையில், மக்கள் எதிர்பார்க்காத நிலையில் அணையைத் திறந்து விட்டதாக பா.ம.க. குற்றம்சாட்டுகிறது. இந்தப் பொய்க் குற்றச்சாட்டுக்கு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தெளிவான விளக்கத்தை அளித்திருக்கிறார்.

ஏரி, ஆறு, வாய்க்கால்களை சரியாகத் தூர் வாரவில்லை என்றும், மழைநீர் வடிகால்களைச் சரியாக அமைக்கவில்லை என்றும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் குற்றம்சாட்ட, பா.ம.க.வும் மற்ற உதிரியான எதிர்க்கட்சிகளும் இதில் சேர்ந்து கொண்டு தி.மு.க அரசு மீது குற்றம்சாட்டுகின்றன.

கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொண்ட தூர்வாரும் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகளால்தான் இந்தப் பெருமழையிலும் பெரிய பாதிப்பு இல்லாத வகையில், தமிழ்நாட்டு மக்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். குறைசொல்லும் பா.ஜ.க. தனது பெருமையாகக் காட்டும் குஜராத் மாடல் தொடங்கி, அதன் ஆட்சி நடந்த-நடக்கின்ற மாநிலங்களில் பருவமழையின் போது என்ன நிலவரம் என்பதை வெளிப்படையாக விவாதிக்கத் தயாரா?

தி.மு.க. என்பது மக்கள் இயக்கம். தேர்தல் களத்திற்கே வராத காலத்தில் 1952-ஆம் ஆண்டு நாகப்பட்டினம் பகுதியில் புயல் வீசிய போது, கலைஞர் தலைமையில் நிவாரணக் குழு அமைத்தார் பேரறிஞர் அண்ணா. நிதி திரட்டியும், கைத்தறித் துணிகளை விற்றும் நாகைப் பகுதியின் மீனவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உதவினார் கலைஞர்.

இன்றைய முதல்வர் சென்னையின் மேயராக இருந்தபோதும், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதும் மழைக் காலங்களில் களத்தில் நின்று பணியாற்றி, மக்களின் துயர் துடைத்தார். இன்றைய துணை முதலமைச்சரும் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று மக்களை சந்திக்கிறார். எனவே எதிர்க்கட்சிகளின் இந்தப் பொய்ப்பிரச்சாரம் மக்களிடம் எடுபடாது.


**இந்தப் பெருமழையிலும் பெரிய பாதிப்பு இல்லாத வகையில், தமிழ்நாட்டு மக்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்.**

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

681

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131